7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதி 32—ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை (24—03—2005) வினாக்கள்—விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32—ஐ நாளை, 24—03—2005 வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (24—3—2005) வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24—03—2005) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

70. 2003—2004 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்

(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

71. 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

72. 2003–2004 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

73. 2003–2004 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

74. 2003–2004 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

107. சிறைகள் பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (தமிழ்)

108. பொதுப் பணித் துறை பற்றிய மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (தமிழ்)

109. மானியக் கோரிக்கை எண் 11– வணிக வரித் துறை– முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)